# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2470/18 - 2026 ජනවාරි මස 05 වැනි සඳුදා - 2026.01.05

*2470/18 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 05 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு**

**2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம்**

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 32(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 157 (1) ஆம் பிரிவின் கீழ் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் ஆக்கப்படும் விதிகள்.

நீதிபதி டபிள்யூ. எம். என். பி. இத்தவெல,
தவிசாளர்.

கே. பீ. ராஜபக்ஷ,
ஆணையாளர்.

சனாதிபதி சட்டத்தரணி சேதிய குணசேகர,
ஆணையாளர்.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு,
2025, திசெம்பர் 24.

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க, ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 26(4), (5), (8) மற்றும் (9) ஆம் பிரிவுகளின் கீழ் ஆணைக்குழுவின் பணியாட்தொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு ஏற்புடைய விதிகள்.

இந்த விதிகள் 2026, சனவரி 01 ஆந் திகதி முதல் செயல்வலுப்பெறும்.

இந்த விதிகள் மூலம் எடுத்துரைக்கப்படாத ஏதேனும் விடயம் தொடர்பிலான பொருள்கோடல் மற்றும் தீர்மானங்கள் 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.


1A – PG 7453 – 04 (2025/12)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**விதிகள்**

1. இந்த விதிகள் 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 26(4), (5), (8) மற்றும் (9) ஆம் உட்பிரிவுகளின் கீழ் ஆணைக்குழுவின் பணியாட்தொதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மற்றும் வேறு ஊழியர்கள் தொடர்பில் சட்டத்தின் 32 (1) ஆம் பிரிவின் நோக்கங்களுக்கான விதிகளாக குறிப்பிடப்படும்.

2. ஆணைக்குழுவினால் விசேடமாக தீர்மானிக்கப்படும் விடயங்கள் தவிர்ந்த 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இயைபுடையதாகாத, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை, நிதி ஒழங்கு விதிகள் மற்றும் அவற்றுக்கு ஏற்புடையதாக அவ்வப்போது பின்னர் வெளியிடப்பட்ட மற்றும் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மூலம் செய்யப்படும் திருத்தங்களின் ஏற்பாடுகள் மற்றும் ஏற்புடைய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் தொடர்பில் வெளியிடப்படும் அரசாங்கத்தின் வேறு ஒழுங்கு விதிகள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் மற்றும் அவற்றுக்கு ஏற்புடையதாக அவ்வப்போது வெளியிடப்படும் திருத்தங்கள் மற்றும் தேவையேற்படுமிடத்து அரசாங்க சேவை ஆணைக்குழு அல்லது அவ்வாறான வேறு உத்தியோகத்தரைக் கொண்டு நியமன அதிகாரி மூலம் வெளியிடப்பட்ட விதிகள், ஒழுங்குவிதிகள், கட்டளைகள் மற்றும் நடைமுறை விதிகள் சட்டத்தின் 26,(4), (5), (8) மற்றும் (9) ஆம் உட்பிரிவுகளின் கீழ் ஆணைக்குழுவின் பணியாட்தொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் மற்றும் வேறு ஊழியர்கள் தொடர்பில் சட்டத்தின் 32 (1) ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக ஏற்புடையதாகும்.

3. இந்த விதிகளில் :

   i. “சட்டம்” என்பது 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டம் எனப் பொருள்படும்.

   ii. “ஆணைக்குழு” என்பது 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 3(1) ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்டுள்ள இலஞ்சம் அலலது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு எனப் பொருள்படும்.

   iii. தாபன விதிக் கோவையில் “திணைக்களத் தலைவர்” என்பது 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 17(1) ஆம் பிரிவிற்கமைய சட்டத்தின் கீழ் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கும் செயற்படுத்துவதற்கும் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்பட்டுள்ள பணிப்பாளர் நாயகம் எனப் பொருள்படும்.

EOG 01-0038

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.